# அரையாண்டுத் தேர்வு 2022

**10 தமிழ்** விடைகள் குறிப்பு

1.' காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் ' நிலத்துக்கு நல்ல உரங்கள் .
இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
ஈ ) சருகும் சண்டும்
2." சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி " என்னும் அடியில் பாக்கம் என்பது -
ஈ ) சிற்றூர்
3. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டு அம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார் . பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் .ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே....
இ ) பால் வழுவமைதி , திணை வழுவமைதி
4. அருந்துணை என்பதைப் பிரித்தால் _________ அ ) அருமை + துணை
5.குளிர் காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள் _______
இ) குறிஞ்சி , மருதம் , நெய்தல்
6.தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது_____
ஈ) சிலப்பதிகாரம்
7. இம்மை செய்து மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன் - என்ற வரிகள் இடம் பெற்ற நூல் —-----
இ) புறநானூறு
8.வாய்மையே மழை நீராகி __ இத்தொடரில் வெளிப்படும் அணி .
இ) உருவகம்
9. துகிர் என்னும் சொல்லின் பொருள் __________. ஆ) பவளம்.
10. வினா ______ வகைப்படும். அ) 6
11. எய்துவார் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர்
12.ஆ) பரிபாடல்
13. ஈ) கீரந்தையார்
14. ஆ) உரு உந்து
15. இ) விசும்பு
16. வசன கவிதை – குறிப்பு வரைக.
விடை:
உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும். கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்.
தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.
17. வினா அமைக்க.
அ) செயற்கை நுண்ணறிவு என்பது யாது?
ஆ) அறம் கூறும் மன்றங்கள் அரசனின் எதற்குத் துணைபுரிந்தன?
18. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்.முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

www.Padasalai.Net

விடை:

உழவர்கள் வயலில் உழுதனர்.

நெய்தல்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர்கள் கடலுக்குச் சென்றனர்.

19. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.

விடை:

தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர்.

20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

வருக என்று வரவேற்றல். இன்முகத்துடன் நலம் விசாரித்தல்.

உபசரித்தல். மனம் மகிழும்படி பேசுதல்.

21. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்.

22. புதிய சொற்களை உருவாக்குக.

மணிமேகலை, வான் மழை, பொன் விளக்கு, பூமணி.

23. எல்லா பறவைகளுக்கும் காதுண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளது போல புறச்செவி மடல் இருக்காது.

24. காட்டு விலங்குகளைச் சுடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் சுட்டல் திருந்த உதவுகிறது.

பசுமையான காட்சி ஐக் காணுதல் கண்ணுக்கு நல்லது.

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

25. கூத்துக் கலைஞர்கள் பாடத் தொடங்கியவுடன் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

26. மரூஉ. அ) திருநெல்வேலி - நெல்லை. ஆ) கோயம்புத்தூர் - கோவை

27. கலைச்சொல் தருக. அ) Vowel- உயிரெழுத்து ஆ) Humanism - மனித நேயம்

28. தமிழ் எண் தருக. 67 - சுஎ , 403 - சΟங

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

பிள்ளை – தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன் .

வடலி – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.

நாற்று – நெல் நாற்று நட்டேன்.

கன்று – வாழைக்கன்று நட்டேன்.

பைங்கூழ் – சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்தவில்லை.

அது மனிதனுக்குரியத் தேவைகளை மட்டுமே மேம்படுத்தி இருக்கிறது.

அறிவியலால் இன்று மனிதன் மனிதனாக வாழவில்லை .

இயந்திரம் மனிதனாகிவிட்டது. மனிதன் இயந்திரம் ஆகிவிட்டான்.

மனிதநேயத்தையும் அன்பையும் இரக்கத்தையும் இன்றைய மனிதனிடம் பார்க்க முடியவில்லை.

www.Padasalai.Net

பணிகளால் அவன் எந்திரத்தைப் போல ஓடிக்கொண்டே உள்ளான்.

31. உரைப்பத்திக்கு விடை.
அ) 1906.
ஆ) சுதேசி கப்பல் நிறுவனம்.
இ) காந்தியடிகள்.

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

குலேச பாண்டியன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன்.
அவன் அவையில் புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை மன்னன் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் முறையிட்டார்.
இறைவன் கடம்பவனம் கோயிலை விட்டு நீங்கி வைகை ஆற்றின் தெற்கே கோயில் உருவாக்கி அமர்ந்தார்.
இதையறிந்த மன்னன் யான் என்ன தவறு செய்தேன்? ஏன் இங்கு அமர்ந்தீர்? என்று வருந்தினான்.
இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றமே தவிர, வேறு எந்த தவறும் இல்லை என்றார்.
தன் தவறை உணர்ந்த மன்னன் இடைக்காடனாரை அழைத்து மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்தி, பணிந்து வணங்கி தம் தவறைப் பொறுத்தருள வேண்டினான்.
33. சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது – இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.

இடம் சுட்டல்: “சித்தாளு” என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதியுள்ள கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.
பொருள் : சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.
விளக்கம் : அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம்கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வைத் தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது.
34)
தூசும், துகிரும், ஆரமும், அகிலும்,
மாசு அறு முத்தும், மணியும், பொன்னும்,
அருங்கல வெறுக்கையோடு அளந்து கடை அறியா
வளம் தலைமயங்கிய நனந்தலை மறுகும்;
பால் வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

35.

| வழுவமைதித் தொடர்கள் | வழுவமைதி வகை |
|---|---|
| • நேற்று பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது. (நிறைந்தது) | கால வழுவமைதி |
| • இலட்சுமி கூப்பிடுகிறாள். (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| • இதோ சென்றுவிட்டேன். (சென்று விடுகிறேன்) | காலவழுமைதி |
| • என்னடா விளையாட வேண்டுமா? (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| • அவனை அவிழ்த்து விட்டேன். (பசு மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| • இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். (மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |

36.அணி இலக்கணம்:
இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை (கருத்தை) ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.
எ.கா: “போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
‘வாரல்’ என்பனபோல் மறித்துக்கை காட்ட”
பாடல் பொருள்:
கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கைகாட்டியது என்பது பொருள்

விளக்கம்:
கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேல் இருந்த கொடிகள் | காற்றில் இயற்கையாக அசைந்தன.

ஆனால் இளங்கோவடிகள், மதுரையில் கோவலன் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள், கையை அசைத்து இம் மதுரைக்குள் வரவேண்டா’ என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாக தன் கருத்தைக் கொடியின் மேல் ஏற்றிக் கூறுகிறார்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரப்/பிடும்/பை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| இல்/லா/ரைக் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கா/ணின் | நேர் நேர் | தேமா |
| நிரப்/விடும்/பை | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| ஒருங்/கு | நிரை நேர் | கருவிளம் |
| கெடும் | நிரை | மலர் |

38.அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்கால சீதையை விவரித்து எழுதுக.

துன்பத்தைத் தருகின்ற மாலைப் பொழுதில் முதிய பெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.
யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரிக்கும் நறுமணம் கொண்ட அரும்புகள்.
மலர்ந்த முல்லைப் பூக்களோடு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவுவர்.
தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.
Answer:
குறிப்புச் சட்டம்

முன்னுரை
வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி
முடிவுரை
முன்னுரை:
தாயின் அன்பை எழுத உலக மொழிகள் போதாது. தாயை இழந்த துயரம் சொல்லில் சொல்ல இயலாது. தாயை இழந்த கருணையனின் கண்ணீர் சொற்களை அறிவோம்.

வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி :

1) மலர்ப்படுக்கை :
கருணையனின் தாய் மறைந்துவிட்டாள். கருணையன் தன் கையைக் குவித்துப் பூமித்தாயே! என் அன்னையின் உடலைக் காப்பாயாக என்று கூறி, குழியிலே மலர்ப்படுக்கையை பரப்பினான். அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும் தன் கண்ணீரையும் பொழிந்தான்.
2) இளம்பயிர் வாட்டம்:
என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது. இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூய மணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன். என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.

3) அம்பு துளைத்த வேதனை:
தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வரியைப் போல என் துயரம் வேதனை தருகிறது. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்
4) தவிப்பு :
சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழிதெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன். நவமணிகள் பதித்த மணிமாலைகளை இணைத்தது

போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.

5) உயிர்கள் அழுதல்:

புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன் மலர்கள் தோறும் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல கூச்சலிட்டன.

முடிவுரை:

வீரமாமுனிவர் உவமை, உருவக மலர்களால் தன் கவிதை மூலம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

39. அ) உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்.

அனுப்புநர்:

கண்ணன்,
25, வள்ளல் தெரு,
அண்ணாநகர்,
அஅஅ – 11.

பெறுநர்:

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
அஅஅ.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல் – தொடர்பாக.

வணக்கம். இன்று காலை பேருந்துநிலையத்திற்கு வெளியில் உள்ள “சுவையகம்” என்ற உணவகத்திற்குச் சென்றோம். நானும் என் நண்பனும் உணவு உண்டோம். உணவில் கல்லும், குழம்பில் பூச்சியும் கிடந்தது. உணவக மேலாளரிடம் முறையிட்டோம்.அதற்குச் சரியான காரணத்தை அவர் அளிக்கவில்லை. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு விலைப்பட்டியல் பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்த தொகையை வாங்காமல் கூடுதலாக இருபது ரூபாயைக் காசாளர் வாங்கினார்.

எனவே, தரமற்ற உணவையும், விலை கூடுதலாகவும் விற்பனை செய்த, அந்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கான தக்க சான்றுகள் (புகைப்படம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி!

அஅஅ
25.05.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கண்ணன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்

உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம், அஅஅ..

40. நயம் பாராட்டுக.

"காலக்கணிதம்"

திரண்ட கருத்து:
கவிஞன் நானே காலத்தைக் கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னைவிட விலை உயர்ந்த செல்வம் என்னுடைய கருத்துகள்.சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும் கடவுளும் அறிந்தவை.

மோனை நயம்:
காட்டுக்கு யானை
பாட்டுக்கு மோனை
செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
கவிஞன்....
கருப்படு....
இவை சரி
இவை தவறாயின் ... மோனை நயம் பெற்று வந்துள்ளது.

எதுகை நயம்:
மதுரைக்கு வைகை
செய்யுளுக்கு எதுகை

செய்யுளில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும். கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் – சீர் எதுகை நயம் அமைந்துள்ளது.

முரண்:
நாட்டுக்கு அரண்
பாட்டுக்கு முரண்
செய்யுளில் அடியிலோ சீரிலோ எதிரெதிர் பொருள் தரும் வகையில் தொடுக்கப்படுவது முரண் ஆகும். ஆக்கல் x அழித்தல் என்று முரண்பட்ட சொற்கள் அமைத்து தொடுத்திருப்பதால் முரண் நயமும் உள்ளது.

இயைபு நயம்:
அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபு ஆகும்.
...புகழுடைத் தெய்வம்
..... பொருளென் செல்வம் – இயைபு நயமும் உள்ளது.

அணி நயம்:
கண்ணதாசன் இப்பாடலில், கடவுளுக்கு இணையாக
யானோர் காலக்கணிதம்

நானோர் புகழுடையத் தெய்வம்
என உருவகப்படுத்தி உள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

41.

நூலக உறுப்பினர் படிவம்
மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு
மைய / கிளை /ஊர்ப்புற நூலகம் கிளை

உறுப்பினர் சேர்க்கை அட்டை
அட்டை எண் : 12345 உறுப்பினர் எண்: 200
பெயர் : அ. விமலா
தந்தை பெயர். : க. அழகுமலை
பிறந்த தேதி. : 01.01.2005
வயது. : 15

படிப்பு. : பத்தாம் வகுப்பு
தொலைபேசி எண் : 0987654321

அஞ்சல் முகவரி - : 30, பூங்கா தெரு,
மதுரை,
625002

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் கிளை நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 100 சந்தா தொகை ரூ 200 ஆக மொத்தம் ரூ 300 ரொக்கமாகச் செலுத்துகிறேன்.நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: திருச்சி தங்கள் உண்மையுள்ள
நாள்: 15/12/2022 அ.விமலா

,

திரு /திருமதி/செல்வி/செல்வன் அ.விமலா அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

42. காட்சியைக் கவினுற எழுதுக.
43. உரைநடை வினா.
44. துணைப்பாட வினா.
45. கட்டுரை.